29th January 1972]

Commissioner for Examinations அலுவலகம் இருப்பதை மூன்று பிராந்தியங்களில் பிரித்துவைப்பது நல்லது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா? அப்படி அந்தந்தப் பிராந்தியங்களில் இருந்து வருகிறவர்கள் அவர்களுடைய மார்க்குகளைத் தெரிந்துகொள்வதற்கு அல்லது அணுகுவதற்கு ஏற்ற நிலையில் டெபுடி கமிஷனர் அந்தஸ்தில் அதிகாரிகளை நியமித்து ரீஜனல் சென்டர்கள் மூன்றுவது ஏற்படுத்தி, அந்த இலாகாவில் டி-சென்ட்ரலைசேஷன் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு துணை அலுவலகம் மதுரையில் வைக்கலாமா என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டது. இங்கே ஒரு ஆணையாளரும் அங்கே ஒரு துணை ஆணையாளரும் வைப்பதன் மூலமாக அந்தப் பணியை இரண்டிடங்களில் வைப்பதை ஆராய்ந்த வரையில் செலவு அதிகமாக இருக்கும் என்பது ஒரு பக்கமிருந்தாலும், ஆணையாளரும் துணை ஆணையாளரும் அவ்வப்போது கூடிக் கலந்து பேசி நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால், ஒரே இடத்தில் இருப்பது நல்லது என்ற முடிவுக்கு வந்தார்கள். தேர்வு நடத்துகிற ஆணையாளர்களைப் பொறுத்தவரையில், பல வகையாகப் பிரித்தாலும், ஒரே இடத்தில் வைத்தாலும், அவர்களது பணி ஒரே வகையாக அமைந்திருக்கிறது. அதை "டிஸ்ட்ரிபியூட்" செய்வதால் தனிப் பலன் எதுவும் ஏற்படப்போவதில்லை. தற்போது அந்த எண்ணம் கைவிடப்பட்டு, தற்போது இங்கேயே வைக்கப்பட்டு, சிலபல தொழிற் நுட்ப தன்மைகளைப் பொறுத்த வரையிலும், சுருக்கெழுத்து மற்ற தன்மைகளில் உள்ள தேர்வுகள் எல்லாம் தொழில்நுட்பக் கல்வி துறைக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இப்போது அவர்களே நடத்துகிறார்கள். இவற்றைப் பிரித்து வைத்தால், பலன் ஏற்படும் என்று தெரிந்தால், பிறகு பரிசீலிக்கலாம். தற்போது அந்த எண்ணம் இல்லை என்பதால் கைவிடப்பட்டிருக்கிறது.

Train Services from Mettupalayam to Ootacamund

* 62 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the train services from Mettupalayam to Ootacamund are to be cancelled by the Central Government; and

(*b*) whether the State Government will take steps to continue the train service?

மேட்டுப்பாளையம்-உதகை புகைவண்டி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி செல்கிற புகை வண்டியை மத்திய அரசு நிறுத்தப் போவதை அரசு அறியுமா?

(இ) அதைத் தொடர்ந்து நடத்த மாநில அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எல். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆதாயமில்லாத எந்தப் பாதையையும் அகற்றுவது தங்கள் விருப்பம் அல்ல என்று 5—7—1969 தேதி யன்று மாநில அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பொழுது மைய அரசினால் அமைக்கப்பட்ட ஆதாயமில்லாத கிளை இருப்புப்பாதைகளின் குழுவின் தலைவர் தெளிவு படுத்தியிருக்கிறார்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.